Ours bank with Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 118 | உள்ளூர் - 28.04.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 118 | வெளியூர் - 29.04.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

நாசிக் நாணய அச்சகம் 534 காலிப்பணியிடங்கள்!
உங்கள் திருமணம் எப்படி? ஜாதக கட்ட தகவல்கள்!
மே -ல் அமலுக்கு வரும் விதி மாற்றங்கள்!
போர் நிறுத்தம், அமெரிக்காவுக்கு 3 நிபந்தனைகள்!

## சிறுவர் - சிறுமிகளுடன் கால்பந்து விளையாடிய பிரதமர் மோடி!



காங்டாக், ஏப் 28–

சிக்கிம் மாநிலம் உருவாக்கப்பட்ட 50–ஆவது ஆண்டு கொண்டாட்ட விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி, காங்டாக்கில் நடைபெறுகிறது.இதில்பங்கேற்பதற்காக பிரதமர் மோடி,2 நாள் பயணமாக சிக்கிம் மாநிலம் காங்டா க்கிற்கு நேற்று சென்றார். அப்போது அவரை சிக்கிம் மாநில ஆளுநர் ஓம் பிரகாஷ் மாத்துர், முதல்–மந்திரி பிரேம் சிங் தமாங் ஆகியோர் நேரில் வரவேற்றனர். அப்போது மோடி, சிக்கிம் மக்கள் அணியும் பாரம்பரிய தொப்பி, கோட் அணிந்திருந்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். சிக்கிமில் நடைபெறவுள்ள ரூ.4,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்கவு ள்ளார். பின்னர் அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றவும் உள்ளார்.

இந்தநிலையில், இன்று காலை இங்கு சில சிறுவர் சிறுமியருடன் கால்பந்து விளையாடியது "புத்துணர்ச்சியை அளித்தது" என்று பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:–

இனிமையான காங்டாக் காலையில், சிக்கிமில் உள்ள எனது இளம் நண்பர்களுடன் கால்பந்து விளையாடியதை போல் வேறு எதுவும் இல்லை. இந்த இளைஞர்களுடன் இது ஒரு புத்துணர்ச்சியூட்டும் கால்பந்துப் பயிற்சி என்பது தெளிவாகத் தெரிகிறது என அதில் பதிவிட்டுள்ளார். பின்னணியில் லோக் பவன் கட்டிடம் தெரியும் வகையில், மோடி விளையாட்டு வீரர்களுடன் ஒரு புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

## மேற்குவங்க மாநிலத்தில் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு...!




கொல்கத்தா, ஏப். 28–

294 தொகுதிகளைக் கொண்ட மேற்கு வங்க மாநிலத்தில் ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29ஆம் தேதி என 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. ஏற்கனவே முதல் கட்டமாக 52 தொகுதிகளுக்கு ஏப்ரல் 23 அன்று தேர்தல் நடைபெற்றது.

இதையடுத்து, 2வது கட்டமாக 142 தொகுதிகளுக்கு ஏப்ரல் 29ந்தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் உள்பட அனைத்து பணிகளுடன் பிரசாரமும் முடிவடைந்துள்ளது. கடைசி நாளான நேற்று (ஏப்ரல் 27ந்தேதி) பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா மற்றும் முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஆகியோர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, இந்த தொகுதிகளில் நாளை (ஏப்ரல் 29ந்தேதி) வாக்குப் பதிவு நடைபெறுகிறது. வாக்குப்பதிவு நாளை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6மணி வரை நடைபெறுகிறது. இந்த இரு கட்டங்களாக நடைபெறும் வாக்குப்பதிவுகள் மே 4ந்தேதி எண்ணப்படுகிறது.

## சிலிண்டர் விலை முதல் பான் கார்டு வரை மே மாதம் அமலுக்கு வரும் விதிமுறை மாற்றங்கள்!




புதுடெல்லி, ஏப். 28–

இந்தியாவில் வருகிற மே மாதம் 1 ஆம் தேதி முதல் பணம் சார்ந் த நிறைய விதிமுறைகளில் சில மாற்றங்கள் வருகின்றன. அது என்னென்ன மாற்றங்கள் என்று பார்க்கலாம்.

**வங்கிப் பரிவர்த்தனைகளில் மாற்றம்:**

மே 1ஆம் தேதி முதல் ஒவ்வொரு டிஜிட்டல் பரிவர்த்தனையும் அதிகப் பாதுகாப்பாக இருக்கும். இரு காரணி அங்கீகாரம் (2FA) கடுமையாகச் செயல்படுத்தப்படவிருக்கிறது. அதாவது, யூபிஐ, நெட் பேங்கிங் அல்லது கார்டு மூலம் பணம் செலுத்தும் போது OTP நம்பர், PIN நம்பர் அல்லது பயோமெட்ரிக் சரிபார்ப்பை மீண்டும் செய்ய வேண்டியிருக்கும். கார்டு இல்லாத பணப் பரிவர்த்தனைகள் இனி இலவசப் பரிவர்த்தனை வரம்பில் கணக்கிடப்படும். இந்த வரம்பை மீறினால் 17 ரூபாய் முதல் 21 ரூபாய் வரை கட்டணம் விதிக்கப்படும்.

**பான் கார்டு விதிமுறைகள்:**

அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகள் மீதான தனது கண்காணிப்பை அரசு இப்போது கடுமையாக்குகிறது. ஒரு நிதியாண்டில் ரூ. 10 லட்சத்திற்கு மேல் பணம் டெபாசிட் செய்யும் அல்லது எடுக்கும் நபர்களுக்கு பான் எண் வழங்குவது கட்டாயமாக்கப்படும். முன்னதாக, இந்த வரம்பு தினசரி அடிப்படையில் கண்காணிக்கப்பட்டது. ஆனால் இப்போது ஆண்டுதோறும் கண்காணிக்கப்படும்.

**மியூச்சுவல் ஃபண்டு மாற்றங்கள்:**

மியூச்சுவல் ஃபண்ட் துறையிலும் மே 1 முதல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தீர்வு சார்ந்த திட்டங்கள் (ஓய்வூதியம் அல்லது குழந்தை திட்டங்கள் போன்றவை) படிப்படியாக நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக ஆயுள் சுழற்சி நிதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்த நிதிகள் முதலீட்டாளரின் வயதின் அடிப்படையில் தங்களின் முதலீட்டுத் தொகுப்புகளைத் தொடர்ந்து மாற்றியமைக்கும் என்று கூறப்படுகிறது. பங்கு பரஸ்பர நிதிகள் இனி தங்கம் மற்றும் வெள்ளி ETFகளில் 35 சதவீதம் வரை முதலீடு செய்ய முடியும். இது சந்தைச் சரிவுகளுக்கு எதிராகப் பாதுகாப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வரி மற்றும் முதலீட்டு விதிகள்:**

சவரன் தங்கப் பத்திரங்களுக்கான (SGB) வரி விதிகள் மாற்றப்பட்டுள்ளன. இனி, அவற்றை நேரடியாக வாங்கும் முதலீட்டாளர்களுக்கு மட்டுமே வரி விலக்கு முதிர்வுப் பலன் கிடைக்கும். இரண்டாம் நிலைச் சந்தை மூலம் வாங்குபவர்கள் மூலதன ஆதாய வரியைச் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பங்குச் சந்தையில் வர்த்தகம்:**

மே 1ஆம் தேதி முதல் டெரிவேட்டிவ்ஸ் வர்த்தகம் செய்பவர்களுக்கான செலவுகள் அதிகரிக்கும். பத்திரப் பரிவர்த்தனை வரி (STT) அதிகரிக்கப் பட்டுள்ளது. ஆப்ஷன்களுக்கு 0.15% மற்றும் ஃபியூச்சர்ஸ்களுக்கு 0.05% வரி விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.இது தீவிர வர்த்தகர்களுக்கான செலவுகளை அதிகரிக்கும். மேலும் சில்லறை முதலீட்டாளர்களையும் பாதிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

**எல்பிஜி சிலிண்டர் விலை:**

14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டரின் விலை ஏப்ரல் மாதம் வரை டெல்லியில் 913 ரூபாயாகவும், மற்ற நகரங்களில் 910 ரூபாய் முதல் 940 ரூபாய் வரையிலும் இருக்கும். 2026 மே மாதத்துக்கான புதிய விலை உயர்வு எதையும் அரசு இன்னும் அறிவிக்கவில்லை. இருப்பினும், ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளது. கேஸ் சிலிண்டர்களின் விலை தொடர்பாக அரசு சில நடவடிக்கைகளை எடுக்ககும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆன்லைன் விளையாட்டு விதிகள்:**

இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, இந்திய இணையவழி விளையாட்டு ஆணையத்தை (OGAI) நிறுவி மத்திய அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இணையவழி விளையாட்டு ஒழுங்குமுறைச் சட்டம் 2025–இன் கீழ், புதிய விதிமுறைகள் மே 1ஆம் தேதி முதல் நாடு முழுவதும் அமலுக்கு வருகின்றன. இந்த புதிய விதிமுறைகள், சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலத்தை இரட்டிப்பாக்குவதன் மூலம் விளையாட்டு நிறுவனங்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்கும்.

## மதுரை சித்திரை திருவிழா

# கோலாகலமாக மீனாட்சி திருக்கல்யாணம்

### பல்லாயிரம் பேர் பங்கேற்பு...!



மதுரை, ஏப். 28–

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான மீனாட்சி திருக்கல்யாணம் இன்று காலை கோலகலமாக நடைபெற்றது. திருமண நிகழ்வில் பங்கேற்ற பெண்கள் பலர் புது தாலி மாற்றி பக்தியை வெளிப்படுத்தினர். பல பக்தர்கள் மணமக்களுக்குத் திருமாங்கல்யம், பட்டுத்துணிகள், பணம் முதலானவற்றை மொய்யாக வழங்கினர்.

உலகப்பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்த வைபத்துக்காக அமைக்கப்பட்டிருந்த திருமண மேடையானது, வெட்டிவேர் மற்றும் நறுமண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 4 மணியளவில் மீனாட்சியம்மன் நான்கு சித்திரை வீதிகளில் திரு உலா வந்து கோயிலின் உள்ளே அமைந்துள்ள திருக்கல்யாண மண்டபத்தில் நாகப்பச்செட்டியார் கட்டளை மண்டகப்படியில் வெள்ளிச் சிம்மாசனத்தில் எழுந்தருளினார்.

இதைத்தொடர்ந்து திருமண வைபவத்திற்கான பணிகள், பூஜைகள் நடைபெற்று வந்த நிலையில், காலை 8.35 மணியிலிருந்து 8.59 மணிக்குள் மீனாட்சி திருக்கல்யாண வைபோகம் கோலாகலமாக நடைபெற்றது.

குலசேகரபட்டர் வழி சிவாச்சாரியார் சுந்தரேஸ்வரராகவும், உக்கிரபாண்டிய பட்டர் வழி சிவாச்சாரியார் மீனாட்சியாகவும் வேடம் பூண்டு மாலை மாற்றித் திருக்கல்யாண நிகழ்ச்சியை நடத்தினர். மாலை மாற்றிக் கொண்ட பின்னர் மீனாட்சிக்கு மங்கல நாண் அணிவிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு பிரியாவிடை அம்மனுக்குப் பொட்டும் அலங்காரமும் செய்யப்பட்டன. பெண் பக்தர்கள் புது தாலி அணிந்து அம்மனை வழிபட்டனர். தொடர்ந்து நடைபெற்ற திருமணச் சடங்குகளுக்கு பின்னர், திருமண நிகழ்வில் பங்கேற்ற பக்தர்கள் மணமக்களுக்குத் திருமாங்கல்யம், பட்டுத்துணிகள், பணம் முதலானவற்றை மொய்யாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சி நிறைவு பெற்ற பின்னர், திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளியுள்ள அம்மனும் சுவாமியும் 'குண்டோதரனுக்கு அன்னம் வழங்கல்' எனும் திருவிளையாடற் புராண நிகழ்வு நடைபெற்றது. முன்னதாக மீனாட்சி திருக்கல்யாணத்தில் பங்கேற்பதற்காக திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியும், அருள்மிகு பவளக்கனிவாய்ப் பெருமாளும் காலை 6 மணிக்கு திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளினர்.

சித்திரை வீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரம்மாண்டமான எல்இடி திரைகளில் திருக்கல்யாணம் நேரடி ஒளிபரப்பு செய்யப் பட்டிருந்ததால் அப்பகுதியில் பொதுமக்கள் கண்டு களித்ததுடன் திருக்கல்யாண நிகழ்வின் போது புது தாலி அணிந்து கொண்டனர்.

இந்நிலையில் திருக்கல்யாண விழாவை முன்னிட்டு 3ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டனர். திருக்கல்யாணத்தை முன்னிட்டு கோயில் வெளி வீதி முழுவதிலும் பக்தர்களின் வசதிக்காக நிழல் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பக்தர்கள் நெரிசல் இன்றி தரிசனம் செய்ய செல்வதற்காக முழுவதும் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

500 ரூபாய் கட்டண ரசீது பெற்ற 2500 பக்தர்கள் காலை 5:00 மணி முதல் 7:00 மணிக்குள் வடக்கு ராஜகோபுரம் வழியாகவும், 200 ரூபாய் கட்டண ரசீது பெற்ற 3500 பக்தர்கள் வடக்கு கிழக்கு சித்திரைத் வீதி அருகே அமைக்கப் பட்டுள்ள பாதை வழியாக வடக்கு கோபுரம் வழியாக கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட என மொத்தமாக 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அனுமதிக்கப்படனர். கோயில் வளாகத்தை சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால் 20 எல்இடி திரைகள் அமைக்கப்பட்டன. மேலும் அதிக வெயிலின் தாக்கம் இருப்பதால் 200 டன் தற்காலிக ஏசி பொறுத்தப்பட்டன.

திருக்கல்யாண மேடை முழுவதும் 2 டன் அளவிற்கான பல்வேறு வகையான பூக்களை வரவழைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. கடும் வெயிலின் தாக்கம் இருப்பதன் காரணமாக நான்கு சித்திரை வீதிகள் முழுவதிலும் நிழலுக்காக தற்காலிக பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருக்கல்யாணத்தை முன்னிட்டு 1.5லட்சம் பக்தர்களுக்கு மதுரை சேதுபதி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், பழமுதிர்ச்சோலை திருவருள் முருகன் பக்த சபை அறக்கட்டளை திருக்கல்யாண விருந்தும் நடைபெற்று வருகிறது.

இதேபோன்று நேற்று மாலை முதல் மாப்பிள்ளை அழைப்பு விருந்தும் நடைபெற்ற நிலையில், இந்த விருந்தின்போது சாப்பிட்ட கையோடு பக்தர்கள் திருக்கோயில் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மொய்ப்பந்தலில், திருக்கல்யாண மொய் எழுதி, பிரசாதம் பெற்றுக் கொண்டனர்.

மேலும் இந்த ஆண்டு ஆன்லைன் மூலமாக முயற்சி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. மீனாட்சியம்மன் திருக்கல்யாண வைபத்தால் மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. மதுரையில் உள்ள அனைவரும் தங்களது வீட்டு திருமணம் போன்று மீனாட்சியம்மன் திருக்கல்யாணத்தை பார்த்து சாமிதரிசனம் செய்து விருந்து உண்டு ,மொய் எழுதும் பழக்கம் ஆண்டாண்டு காலமாக நடைபெற்றுவருகிறது.

திருக்கல்யாண விருந்து வழங்கப்படுகிறது. காலை 7 மணி தொடங்கி மாலை 6 மணி வரை இந்த விருந்து நடைபெறும் என நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து, "தன் தங்கை மீனாட்சியின் திருமணத்திற்காக சீர்வரிசைகளுடன் மதுரை வருகிறார் கள்ளழகர். அவர் வருவதற்கு முன்னரே மீனாட்சியின் கல்யாணம் முடிந்து விட்டதால், கோபித்துக் கொண்ட அவர் வைகையாற்றில் இறங்கி குளித்து விட்டு வண்டியூர் சென்று விடுகிறார். அன்றிரவு அங்கு தன் காதலி துலுக்க நாச்சியார் வீட்டில் தங்கி விட்டு மீண்டும் அழகர் மலைக்கு திரும்பி விடுகிறார்" என்பது தான் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழாவின் சிறப்பம்சமாகும்.

தலையங்கம் மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 28.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 15-ம் தேதி

# கொளுத்தும் வெயிலால் சரியும் நீர் மட்டம்.!



தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் வீடுகளுக்குள் இருந்து பகல் நேரங்களில் வெளியே வரவே பொதுமக்கள் அச்சமடையும் நிலையானது நீடித்து வருகிறது. இன்னும் அக்னி வெயில் தொடங்காத நிலையில் எப்போதும் இல்லாத வகையில் காலை 7 மணிக்கே சூரியன் சுட்டெரிக்க தொடங்குகிறது. நேரம் செல்ல செல்ல வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வரும் நாட்களில் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதிலும் வருகிற செப்டம்பர் மாதம் வரை வெயில் கொளுத்தும் என எச்சரித்துள்ளனர்.

பொதுவாக நவம்பர் டிசம்பரில் நல்ல மழை பெய்தால், சென்னைக்கு அடுத்து வரும் கோடைக் காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு வராது. அந்த வகையில் கடந்தாண்டு அக்டோபர் முதல் பருவமழை தொடங்கினாலும் சென்னையை பொருத்தமட்டில் பருவமழை இயல்பான அளவையே ஒட்டி இருந்தது. இந்த நிலையில் இந்த வெயிலின் தாக்கத்தில் தமிழகம் முழுவதும் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இந்த நிலையில் நீர் மட்டம் வெகுவாக சரிந்து வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம், பூண்டி, சோழவரம், புழல், கண்ணன்கோட்டை–தேர்வாய்கண்டிகை ஆகிய ஏரிகளில் நீர்மட்டம், வெயில் காரணமாக தற்போது நீர் இருப்பு குறைந்து வருகிறது. எனவே வரும் நாட்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக வெளியாகி பொதுமக்களுக்கு அச்சம் அடைய செய்துள்ளது. இந்த நிலையில் சென்னையில் குடிநீர் இருப்பு எவ்வளவு உள்ளது. வரும் நாட்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுமா என்ற கேள்விக்கு சென்னை குடிநீர் வழங்கல் வாரியம் விளக்கம் அளித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை குடிநீர் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே தற்போதைய சூழலில் இடமில்லை எனவும் அடுத்த பருவமழை வரை தேவையான போதிய குடிநீர் ஏரிகளில் கையிருப்பு இருப்பதாக தெரிவித்துள்ளது. தற்போது தினசரி குடிநீர் தேவைக்காக புழல் ஏரியில் இருந்து 205 கன அடியும், கண்ணன்கோட்டை–தேர்வாய் கண்டிகை ஏரியில் இருந்து 18 கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 202 கன அடியும், பூண்டி ஏரியில் இருந்து 317 கன அடியும், சோழவரம் ஏரியில் இருந்து 8 கன அடியும் நீர் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்களான மீஞ்சூர் மற்றும் நிம்மதியிலிருந்து 200 மில்லியன் லிட்டர் குடிநீர் சராசரியாக எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

கோடை காலத்தில் குடிநீர் வினியோகம் செய்வதில் தொடர்ந்து பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்க குடிநீர் லாரிகள் முறையாக கண்காணிக்கப்படுவதாகவும் அனைத்து பகுதிகளுக்கும் தடையின்றி குடிநீர் சேவை வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் காலநிலை மாற்றம் காரணமாக நாளுக்கு நாள் புவி வெப்பமயமாதல் அதிகரித்து வரும் நிலையில் நாளுக்கு நாள் கோடைகாலங்களில் குடிநீர் தேவையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவே மழைக்காலங்களில் பெய்யும் மழை நீரை முழுமையாக சேகரித்து வைக்க போதிய கட்டமைப்புகளை உருவாக்குவது அவசியம்.

# மீனாட்சி அம்மன் திருக்கல்யாணத்தை முன்னிட்டு ஒன்றரை லட்சம் பேருக்கு விருந்து!





மதுரை, ஏப். 28–

மதுரை சேதுபதி மேல் நிலைப்பள்ளியில் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கல்யாண மாப்பிள்ளை விருந்து தொடங்கியது. மாநகர் மதுரையில் சித்திரைத் திருவிழா ஒன்பதாம் நாள் மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் இன்று காலை நடைபெறுகிறது.

அதற்கான முதல் நாள் மாப்பிள்ளை விருந்து பழமுதிர்ச் சோலை திருவருள் முருகன் பக்த சபை டிரஸ்ட் சார்பில் நேற்று மாலை சேதுபதி மேல் நிலைப்பள்ளியில் சிறப்பு பூஜைகள் செய்து ஸ்தாபகர் தெய்வத்திரு செவந்திராஜன் மற்றும் கடந்த இருபத்து மூன்று ஆண்டுகள் அயராது இதனை முன்னெடுத்துச் சென்ற சாமுண்டி பி என். விவேகானந்தன் அவர்கள் ஆசியுடன் 28 ஆம் ஆண்டு சேவை தொடங்கியது.

சேதுபதி பள்ளிச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் எஸ். பார்த்தசாரதி, கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம், காவல்துறை உயர் அதிகாரிகள், கண் மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ். சீனிவாசன், பாபு, மாமன்ற உறுப்பினர் விஜயா குரு, மேனாள் பிஆர் ஓ ஆர். பாஸ்கரன், தாம்பிராஸ் இல. அமுதன், பள்ளி முதல்வர் கே,எஸ். நாராயணன், மேனாள் டிஎஸ்பி. கணேசன், தியாக தீபம் அ. பாலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட எப் எஸ் எஸ் ஐ அதிகாரி, சமூக சேவகர் காமாட்சி சுவாமிநாதன் உள்ளிட்ட ஏராளமான பெருமக்கள் பங்கேற்று தொடங்கி வைத்தனர். நாற்பதாயிரம் பேருக்கு நேற்று இரவு விருந்தில் கேசரி, போண்டா, பொங்கல் விருந்தினை அதன் தலைவர் பி. தண்டீஸ்வரன், செயலாளர் எஸ் ஆர் வெங்கடேசன், துணைத் தலைவர் வழக்கறிஞர் கே. கார்த்திகேயன் என்ற ராஜா, பொருளாளர் பிஎன். வி.ஹரி மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

நேற்று இரவு பெரும் திரளான மக்கள் வெள்ளத்தில் இந்த விருந்து மிக கட்டுப்பாடாக, மிக நேர்த்தியாக நமது முன்னோர்கள் அறப்பணிகளால் நடந்து வருகிறது. இதனை உலகை ஆளும் நமது அன்னை மீனாட்சி நடத்துகின்றார்.

சேவை மனப்பான்மை கொண்ட பலநூறு அன்பர்கள் மற்றும் மகளிர் அமைப்புகள் கடந்த இரண்டு நாட்களாக காய்கறிகள் வெட்டுவது, சமையல் பணியாற்றுவது, பரிமாறும் பணி, சுத்தம் செய்யும் பணி, கூட்டத்தை மிக நேர்த்தியாக ஒழுங்குபடுத்தும் பணி என ஆலவாய் அண்ணல் அங்கயற்கண்ணிக்கு தொண்டாகச் செய்து வருவது வணங்குதற்குரியது.

இன்று காலை முதல் மாலை வரை திருக்கல்யாண விருந்து ஒன்றரை லட்சம் பேருக்கு தயாராகி வருகிறது. இந்த திருப்பணி விருந்துக்கு மதுரை மக்கள் தாமாக முன்வந்து பேருதவி புரிகின்றனர். மேலும் இங்கு சமையல் உட்பட அனைத்துப் பணிகளும் துறை சார்ந்த பெருமக்களின் உழைப்பும் அன்னைக்கு கடமையாற்றும் உணர்வு மட்டுமே. யாரும் ஊதியம் பெறுவதில்லை. இது மாநகர் மதுரையில் நடைபெறும் மகத்தான திருப்பணி. ஒப்பீடு இல்லாத அறப்பணி வாழியவே.

# 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் திட்டமிட்ட தேதிகளில் வெளியீடு!



சென்னை, ஏப். 28–

தமிழக அரசின் பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 12–ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 2–ந் தேதி தொடங்கி 26–ந் தேதி வரை நடைபெற்றது. இதனை சுமார் 8 லட்சம் மாணவ–மாணவிகள் எழுதினர். இதேபோல 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 11–ந் தேதி தொடங்கி கடந்த 6–ந் தேதி வரை நடந்தது. இத்தேர்வை சுமார் 9 லட்சம் மாணவ–மாணவிகள் எழுதினர்.

இதைத்தொடர்ந்து விடைத்தாள்கள் திருத்தும் பணி தமிழகம் முழுவதும் பல்வேறு மையங்களில் நடைபெற்றது. இப்பணிகள் சமீபத்தில் முடிவடைந்தன. இதைத்தொடர்ந்து மாணவ–மாணவிகள் பெற்ற மதிப்பெண்கள் கணினியில் பதிவேற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

12–ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவு மே மாதம் 8–ந் தேதி வெளியிடப்படும் எனவும், 10–ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே மாதம் 20–ந் தேதி வெளியிடப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்அடிப்படையில் அதற்கான பணிகளை பள்ளிக்கல்வி, தேர்வுத்துறை அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் பொதுத்தேர்வு முடிவுகள் திட்டமிட்ட தேதிகளில் வெளியிடப்படும் என தேர்வுத்துறை வட்டாரத்தில் தெரிவித்தனர். பிளஸ்–1 அரியர் தேர்வு எழுதியவர்களுக்கும் அடுத்த மாதம் 20–ந் தேதி தேர்வு முடிவு வெளியிடப்படுகிறது.

# ஊழியர்களுக்கு ஷாக் நியூஸ்..! 1-ஆம் தேதி சம்பளம் வழங்கப்படாது..!




புதுடெல்லி, ஏப். 28–

மே 1–ஆம் தேதி தங்கள் சம்பளத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஊழியர்களுக்கு, இம்முறை சற்று ஏமாற்றம் ஏற்படக்கூடும். இதற்குக் காரணம், அதே நாளில் தொழிலாளர் தினமும் (Labor Day) மற்றும் புத்த பூர்ணிமாவும் வருவதே ஆகும்.இவ்விரு நாட்களிலும், நாடு முழுவதும் உள்ள வங்கிகள் மூடப்பட்டிருக்கும். எனவே, சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவது இயல்பானதே. மே 1–ஆம் தேதி அரசு மற்றும் தனியார் வங்கிகள் இயங்காததால், சம்பளப் பரிசீலனை மற்றும் பணப் பரிமாற்றச் செயல்முறைகள் (clearing) அனைத்தும் முடங்கிப்போகும்.

குறிப்பாக NEFT மற்றும் RTGS போன்ற மின்னணுப் பரிமாற்ற அமைப்புகள் முழுமையாகச் செயல்படாததால், சம்பளத் தொகையை நேரடியாக வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பதில் தாமதம் ஏற்படும். சில டிஜிட்டல் சேவைகள் தொடர்ந்து இயங்கினாலும், நிறுவனங்கள் வழக்கமாக வேலை நாட்களில் மட்டுமே சம்பளப் பரிசீலனைப் பணிகளை மேற்கொள்கின்றன.

இதன் விளைவாக, மே 1–ஆம் தேதி சம்பளம் பெறவேண்டிய ஊழியர்களின் வங்கிக் கணக்குகளில், சம்பளத் தொகை மே 2–ஆம் தேதியோ அல்லது அதற்கு அடுத்த வேலை நாளிலோ வரவு வைக்கப்பட வாய்ப்புள்ளது. இது முற்றிலும், நிறுவனம் எப்போது சம்பளத்தை விடுவிக்கிறது என்பதையும், வங்கிகளின் பணப் பரிமாற்றச் செயல்முறை கால அளவுகளையும் சார்ந்தே அமையும். தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை, நிலைமை சற்று மாறுபட்டு இருக்கும்.

சில நிறுவனங்கள், ஊழியர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில், சம்பளத்தை முன்கூட்டியே விடுவிக்கும் நடைமுறையைக் கொண்டுள்ளன. இருப்பினும், பெரும்பாலான நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட கால அட்டவணையைப் பின்பற்றுவதால், ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தாமதம் ஏற்படுவது சாதாரணமாகும்.

UPI மற்றும் மொபைல் பேங்கிங் போன்ற டிஜிட்டல் வங்கிச் சேவைகள் நாள் முழுவதும் 24 மணி நேரமும் கிடைக்கப்பெற்றாலும், சம்பளத்தை வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கும் பணி வழக்கமாக 'தொகுப்புச் செயல்முறை' (batch processing) மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, விடுமுறை நாட்களில் இப்பணிகள் பாதிக்கப்படுகின்றன.

இத்தகைய சூழலில் ஊழியர்கள் எவ்வித கவலையும் கொள்ளத் தேவையில்லை. இந்தத் தாமதம் முற்றிலும் தற்காலிகமானதே. வழக்கமாக, அடுத்த வேலை நாளிலேயே சம்பளத் தொகை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடும். மே மாதத்தில் வங்கிகளுக்குப் பல முக்கிய விடுமுறை நாட்கள் அமைந்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமைகள் (3, 10, 17, 24, 31), மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகள் (9, 23), மற்றும் பல்வேறு பிராந்திய விழா நாட்கள் ஆகியவற்றில் வங்கிகள் மூடப்பட்டிருக்கும். இந்த விடுமுறை நாட்களில் ரவீந்திரநாத் தாகூர் ஜெயந்தி, மாநிலத் தோற்ற நாட்கள் மற்றும் ஈத் அல்–அதா (பக்ரீத்) போன்ற பண்டிகைகளும் அடங்கும்.

# LPG கேஸ் சிலிண்டர் முன்பதிவு முதல் விலை வரை..!! மே 1ஆம் தேதியில் இருந்து எல்லாமே மாறுது..!!



சென்னை, ஏப். 28–

மே மாதத்தில் இருந்து ஓடிபி அடிப்படையிலான சிலிண்டர் டெலிவரி முறையை 100% நடைமுறைக்கு கொண்டு வர அரசும் சிலிண்டர் டெலிவரி நிறுவனங்களும் முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது. இதன்படி சிலிண்டர் நாம் முன் பதிவு செய்யும்போதே பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு ஒரு ஓடிபி வரும். சிலிண்டர் உங்களுக்கு டெலிவரி செய்யப்படும் சமயத்தில் அந்த ஓடிபி–ஐ நீங்கள் பகிர வேண்டும். அவ்வாறு பகிர்ந்தால் மட்டுமே சிலிண்டர் டெலிவரி கிடைக்கும். இதனை Delivery authentication Code என அழைக்கிறார்கள். எனவே சிலிண்டர் பதிவு செய்கையில் போனிற்கு வரும் மெசேஜை மறக்காமல் சேவ் செய்து கொள்ளுங்கள்.

இந்த ஓடிபி 4 இலக்க எண்களாக இருக்கும். இது இருந்தால் சிலிண்டர் டெலிவரி கிடைக்கும். ஏனெனில் இந்த கோடினை உள்ளிட்டால் தான் சிலிண்டர் டெலிவரி நிறைவேறியதாக நிறுவன சிஸ்டமில் அப்டேட் ஆகும். அந்த வகையில் சிலிண்டர் திருட்டு, கள்ள சந்தை விற்பனை ஆகியவை தடுக்கப்படுகிறது. தற்போதைக்கு நாட்டில் 94 சதவீதம் இது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது மே மாதத்திலிருந்து இதனை 100% நடைமுறைக்கு கொண்டு வர அரசு முடிவு செய்திருக்கிறதாம்.

அதே வேளையில் சிலிண்டர் விலை மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதியன்று சிலிண்டர் விலை மாறும். சர்வதேச சந்தை நிலவரத்துக்கு ஏற்ப விலை மாற்றம் இருக்கும். எனவே மே மாதத்தில் சிலிண்டர் விலை மாற்றப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.


## வாக்கு எண்ணும் மையத்தின் கட்டுப்பாட்டு அறையில்

# 'ஜனநாயகன்' படம் பார்த்த ஊழியர் கைது...!



சென்னை, ஏப். 28–

வாக்கு எண்ணும் மையத்தின் கட்டுப்பாட்டு அறையில் சட்டவிரோதமாக 'ஜனநாயகன்' படம் பார்த்த சிசிடிவி மெயின்டனன்ஸ் ஊழியர் யுவராஜ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னை அண்ணா பல்கலைக்கழக சிசிடிவி கட்டுப்பாட்டு அறையில் அமர்ந்து, 'ஜனநாயகன்' படம் பார்த்ததை அவரே சமூக வலைதளத்தில் பகிர்ந்த நிலையில், ஒப்பந்த ஊழியரான அவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிசிடிவி அறையில் யுவராஜ் டெக்னிகல் ஹெட் ஆக பணியமர்த்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# உங்கள் திருமணம் எப்படி நடைபெறும்? ஜாதக கட்டம் கூறும் தகவல்கள்!



திருமணம் என்பது உணர்வுப்பூர்வமான பந்தம் மட்டும் அல்ல, தனி ஒரு நபரின் பொருளாதார நிலை மற்றும் சமூக நிலையில் பெரும் தாக்கத்தை உண்டாக்கும் ஒரு முக்கிய நிகழ்வு ஆகும். தனி நபரின் வாழ்க்கையின் இரண்டாம் பகுதியை குறிக்கும் இந்த திருமணம், ஒரு சில கிரகங்களின் பார்வையால் கலவையான பலன்களை எதிர்கொள்ளலாம். அதாவது, உங்கள் வருங்கால வாழ்க்கை துணையின் வாழ்க்கை நிலையை அறிந்துக்கொள்ள உதவி செய்யும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக, கிரகங்களின் நிலைபாடு, உங்கள் திருமணத்தை முடிப்பதில் தடைகளை கொண்டு வருமா? மாறாக திருமணத்தை சிறப்பாக செய்து முடிக்குமா? என்பதை புரிந்துக்கொள்ளவும் இது உதவியாக இருக்கும். அதுமட்டும் அல்ல, திருமணத்திற்கு பின்னர் தன் வாழ்க்கை தன்னுடன் எப்படி நடந்துக்கொள்வார், தனது வாழ்க்கை லட்சியத்திற்கு உதவி செய்வாரா? இல்லையா? என்பதை அறிந்துக் கொள்ளவும் முடியும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**திருமணத்தை விவரிக்கும் கட்டங்கள்!**

தனி ஒரு நபரின் ஜாதகத்தில் 7–ஆம் வீடு கணவன் / மனைவி குணாதிசயங்களை பிரதிபலிக்கும். அதேநேரம் 8–ஆம் வீடு வருங்கால வாழ்க்கை நிலையின் பொருளாதார நிலை எப்படி இருக்கும் என்பதை கணிக்க உதவி செய்யவும். மேலும் 11–ஆம் வீடு வருமானம் மற்றும் நிதி ஆதாயங்களை குறிப்பிடுகிறது. குறித்த இந்த வீடுகளின் கிரகங்களின் (குரு மற்றும் சுக்கிரன்) நிலைபாடு என்ன? கிரகங்களின் நிலை ஜாதகத்திற்கு உரியவரின் திருமண வாழ்க்கையில் உண்டாக்கும் மாற்றம் என்ன? என்பதை கணிக்க உதவி செய்கிறது.

உங்கள் ஜாதகத்தில் சுக்கிரன் இருக்கும் இடத்தை பொறுத்து உங்கள் திருமணம் ஆடம்பரமாக நடக்குமா? அல்லது எளிமையாக நடக்குமா? என்பதை கணிக்க முடியும். அன்பு, செல்வம் மற்றும் உறவுகளை குறிக்கும் இந்த கிரகம் தான் ஆட்சி செய்யும் ராசிகளான ரிஷபம், துலாம் ராசியில் வலுவான நிலையில் இருந்தாலோ; அல்லது மீன ராசியில் உச்சம் பெற்று இருந்தாலோ உங்கள் திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடைபெறும். பணத்தை அதிகம் செலவு செய்து, மிகவும் பிரமாண்டமாக உங்கள் திருமணத்தை முடிப்பீர்கள்.

உங்கள் ஜாதகத்தில் 7வது மற்றும் 11–வது கட்டங்களுடன் ஆதாய வீடு இணைந்திருந்தால், திருமணத்திற்கு பின் உங்கள் வாழ்க்கை செல்வ செழிப்புடன் இருக்கும். குறிப்பாக, உங்கள் வருங்கால வாழ்க்கை துணையின் வருமான ஆதாரங்கள் அதிகரிக்கும், பொருளாதார நிலையும் மேம்படும்.

வேத ஜோதிடத்தில் குரு, வளர்ச்சி மற்றும் செழிப்பின் கிரகமாக பார்க்கப்படுகிறது. உங்கள் ஜாதகத்தில் 7–வது வீட்டில் அல்லது அதற்கு அருகில் குரு இருந்தால் அது நல்ல ஒரு அறிகுறியாக பார்க்கப்படுகிறது. திருமணத்திற்கு முன் இருந்த கடன் பிரச்சனைகளை இந்த ஜாதக அமைப்பு முடித்து வைக்கும். அதாவது, கடன் பிரச்சனைகளை குறைத்து, நிம்மதியான வாழ்வு வாழ உதவி செய்யும்.

உங்கள் ஜாதகத்தில் 8–ஆம் ஸ்தானம் மிகவும் வலுவான நிலையில் இருப்பது, வாழ்க்கை துணையின் ஆதரவை குறிக்கிறது. பொருளாதார ரீதியாகவும், உணர்வு பூர்வமாகவும் உங்களுக்கு உற்ற துணையாகவும் அவர் இருப்பார். மேலும், புகுந்த வீட்டின் பொருளாதார நிலையை உயர்த்தும் ஒரு ஜாதக அமைப்பாகவும் இது பார்க்கப்படுகிறது. குறிப்பிட்ட இந்த ஜாதக அமைப்பு கொண்டிருக்கும் நபரை திருமணம் செய்வது, திருமணத்திற்கு பின் உங்களை செல்வந்தராக மாற்றும்.

உங்கள் ஜாதகத்தில் 7–ஆம் வீட்டில் அல்லது 11–வது வீட்டில் ராகு இடம்பெறுவது, திடீர் உயர்வு, எழுச்சியை குறிக்கிறது. பொருளாதார ரீதியாக உங்களை அடுத்தடுத்த கட்டத்திற்கு கொண்டுச் செல்லும் எனவும் கூறுகிறது.

மறுபுறம், குறித்த இந்த 3 கட்டங்களை மட்டும் பார்ப்பது கூடாது. ஆரோக்கியமான திருமண வாழ்வுக்கு, முழுமையான ஜாதக அமைப்பதை ஆய்வு செய்வது அவசியம். தனி நபரின் தனித்துவமான ஜாதக அமைப்பை பொறுத்து, அவர்களுக்கான திருமண பலன்கள் மாறுபடலாம் எனவும் கூறப்படுகிறது. ஜோதிடத்தை ஒரு வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும், எதிர்காலத்தை கூறும் ஒரு முறையாக பயன்படுத்த கூடாது எனவும் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.



பழனி முருகன் மலைக் கோவிலில் முதல் நாள் பணம் என்னப்பட்டது. இதில் ரூ 4 கோடியே, 62 லட்சத்தி, 27 ஆயிரத்தி, 739 கிடைத்தது. உண்டியல் என்னும் நிகழ்ச்சியில் கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து மற்றும் கோவில் ஊழியர்கள் பங்கேற்றனர்.




## இந்த 3 பழக்கங்கள் உங்கள் மூளையை மெல்லச் சிதைத்துவிடும்..!




நமது உடலில் நடைபெறும் ஒவ்வொரு செயல்பாட்டையும் கட்டுப்படுத்தும் முதன்மையான உறுப்பு மூளையே ஆகும். நாம் சிந்திக்கும் விதம், நினைவில் கொள்ளும் திறன் மற்றும் முடிவெடுக்கும் ஆற்றல் ஆகிய அனைத்தும் மூளையையே சார்ந்திருக்கின்றன. இருப்பினும், வயது ஏற ஏற, பலரும் தற்போது மறதி, ஞாபக மறதி மற்றும் பார்கின்சன் நோய் போன்ற நரம்பியல் சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகள் திடீரென ஏற்படுவதில்லை; மாறாக, நாம் அன்றாடம் செய்யும் சிறுசிறு தவறுகளின் விளைவாகவே இவை மெல்ல மெல்ல வளர்கின்றன. நிபுணர்களின் கூற்றுப்படி, நமது வாழ்க்கை முறையில் சில மாற்றங்களைச் செய்துகொண்டால், இப்பிரச்சனைகளைப் பெருமளவு தடுத்துவிட முடியும்.

முதலாவதாக, முறையான உறக்கம் மிக அவசியமாகும். பணிச்சுமை அல்லது அலைபேசி பயன்பாடு காரணமாகப் பலரும் போதுமான அளவு உறக்கம் பெறுவதில்லை. ஒரு நாளைக்குக் குறைந்தது 7 முதல் 8 மணி நேரம் உறங்குவது இன்றியமையாதது. நாம் உறங்கும்போது, மூளையானது தன்னைத்தானே சுத்தம் செய்துகொள்கிறது; பழைய செல்களை நீக்கிவிட்டுப் புத்துணர்ச்சியையும் புதிய ஆற்றலையும் பெறுகிறது. உறக்கம் போதுமானதாக இல்லாவிட்டால், மூளை சோர்வடைந்து, சிந்திக்கும் திறன் குறைகிறது. எனவே, உறங்கச் செல்வதற்குச் சற்று முன்னதாகவே அலைபேசி, தொலைக்காட்சி போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதைக் குறைத்துக்கொள்வது சிறந்தது.

இரண்டாவதாக, காலை உணவை ஒருபோதும் தவிர்க்கக்கூடாது. அவசரத்தின் காரணமாகப் பலரும் காலை உணவைத் தவிர்த்துவிடுகின்றனர். ஆனால், இது மூளைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. காலையில் காலை உணவை உட்கொள்ளாவிட்டால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்துவிடுகிறது. இதன் விளைவாகத் தலைவலி, சோர்வு மற்றும் கவனக்குறைவு ஆகியவை ஏற்படுகின்றன. நாள் முழுவதும் சீராகச் செயல்படுவதற்கு, காலையில் மூளைக்குத் தேவையான முறையான ஊட்டச்சத்து கிடைப்பது அவசியமாகும். அதனால்தான், புரதம், பழங்கள் மற்றும் தானியங்கள் நிறைந்த காலை உணவை உட்கொள்வது நன்மை பயக்கும்.

மூன்றாவதாக, உடல் சார்ந்த செயல்பாடுகள் (உடற்பயிற்சி) மிக முக்கியமானவை. நாள் முழுவதும் ஒரே இடத்தில் அமர்ந்துகொண்டே வேலை செய்வது, உடல் மட்டுமின்றி மூளையையும் பலவீனப்படுத்துகிறது. ஒரு நாளைக்குக் குறைந்தது 30 நிமிடங்களாவது நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி செய்வது, மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது. இது மூளைச் செல்களைச் சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவுவதுடன், நினைவாற்றலையும் மேம்படுத்துகிறது. மேலும், நரம்பியல் சார்ந்த நோய்கள் நம்மை அண்டாமல் தடுக்கவும் இது துணைபுரிகிறது.

அதுமட்டுமின்றி, மன அழுத்தத்தைக் குறைப்பதும் மிக அவசியமாகும். அளவுக்கு அதிகமான மன இறுக்கம் மூளையின் செயல்பாட்டைப் பாதிக்கக்கூடும். தியானம் மற்றும் யோகா போன்ற பழக்கங்களைக் கடைப்பிடிப்பது மனதை அமைதிப்படுத்த உதவும். ஆகமொத்தத்தில், முறையான உணவுமுறை, போதுமான உறக்கம் மற்றும் உடற்பயிற்சி ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்படும்போதுதான், மூளையை ஆரோக்கியத்துடன் வைத்திருக்க முடியும். மூளையின் ஆரோக்கியத்தைப் பேணுவது மிகவும் எளிது. சிறிய பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்வதன் மூலம், பெரிய பிரச்சனைகளைத் தவிர்க்க முடியும். நல்ல உறக்கம், சத்தான உணவு மற்றும் சீரான உடற்பயிற்சி ஆகியவை நமது மூளையை நீண்ட காலத்திற்குச் சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஞாபக மறதி மற்றும் நரம்பியல் சார்ந்த குறைபாடுகளைத் தடுக்கத் துணைபுரியும்.

## 300 பாதுகாவலர்கள் 30000 கோடி ரூபாய் பட்ஜெட்... டொனால்ட் டிரம்ப் பாதுகாப்பிற்காக தினசரி செலவு எவ்வளவு?



வாஷிங்டன், ஏப். 28–

வாஷிங்டனின் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற வெள்ளை மாளிகை செய்தியாளர்கள் இரவு விருந்தின் போது ஹோட்டலுக்கு வெளியே ஆயுதம் ஏந்திய நபர் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அதிபர் டிரம்ப், முதல் பெண்மணி மெலானியா டிரம்ப், துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் உள்ளிட்டோர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

2024ம் ஆண்டு ஜூலை மாதம் பெனிசில்வேனியாவில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த டிரம்ப் மீது மிக மோசமான தாக்குதல் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து அப்போதைய எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் அதிபருமான டிரம்பின் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதுகுறித்த தகவல்கள் பிபிசி–யில் செய்தியாக வெளியானது, அதில் : பதவியில் இருக்கும் அதிபர் மற்றும் துணை அதிபருக்கு சேர்த்து சுமார் 300 பாதுகாப்பு வீரர்கள் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகள் எண்ணிக்கை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட வில்லை என்றபோதும், நிபுணர்கள் கணிப்புப்படி, முன்னாள் அதிபருக்கு ஒரே நேரத்தில் சுமார் 80 அதிகாரிகள் பாதுகாப்பு வழங்க, மொத்தத்தில் 90 முதல் 100 பேர் வரை பணியில் ஈடுபடுவதாகக் கூறினர்.

பாதுகாப்பு என்பது அருகில் இருக்கும் அதிகாரிகள் மட்டுமல்லாமல் துல்லியத் துப்பாக்கி குழு, தாக்குதல் தடுப்பு குழு, கண்காணிப்பு குழு உள்ளிட்ட பல அடுக்குகளைக் கொண்டது. சாதாரணமாக முன்னாள் அதிபர்களுக்கு இந்த அனைத்து பாதுகாப்பும் தினசரி வழங்கப்படாது. ஆனால் விதிவிலக்காக டிரம்ப்பிற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

அமெரிக்க ரகசிய சேவை அமைப்பின் 2024 பட்ஜெட் சுமார் 3.1 பில்லியன் டாலர் (சுமார் ரூ. 30000 கோடி). இதில் 1 பில்லியன் டாலருக்கு மேல் பாதுகாப்பு பணிகளுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 8,000 ஊழியர்களில் 3,671 பேர் நேரடியாக பாதுகாப்பு பணியில் உள்ளனர்.

மேலும், டிரம்ப் தனது சொந்த மாநிலமான மார்–அ–லகோ செல்லும் போது தினசரி சுமார் 60,000 டாலர் செலவாவதாகவும், நியூயார்க் நகரில் பாதுகாப்பு பணிகளுக்காக தினசரி 1,00,000 டாலர் வரை செலவானதாகவும் டிரம்ப் அங்கு தங்கியிருந்தால் தினசரி செலவு 3,00,000 டாலர் வரை அதிகரித்ததாகவும் 2024ம் ஆண்டு வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மொத்தத்தில், டிரம்ப் போன்ற அதிபர்களுக்கான பாதுகாப்பு மிகப்பெரிய செலவினத்துடன் பல அடுக்குகளைக் கொண்ட அமைப்பாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## போர் நிறுத்தம், ஹார்முஸ் ஜலசந்தி, அணுசக்தி விவகாரம்: அமெரிக்காவுக்கு ஈரான் 3 நிபந்தனைகள்!





டெஹ்ரான், ஏப். 28–

அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு ஈரான் மூன்று கட்டங்கள் கொண்ட புதிய திட்டத்தை முன்வைத்துள்ளது.

பாகிஸ்தானில் இரு நாடுகளுக்கு இடையே 2–ம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறாததை தொடர்ந்து, ஈரான் இந்த அதிரடி நிபந்தனைகளை விதித்துள்ளது.

போர் நிறுத்தம், ஹார்முஸ் ஜலசந்தியின் மேலாண்மை, அணுசக்தி விவகாரம் ஆகியவற்றை மையமாக வைத்து இந்தத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**முதல் கட்டம்:** ஈரான் மற்றும் லெபனான் மீது போர் தொடுக்கப்படாது என்பதற்கும், போர் முழுமையாக நிறுத்தப்படுவதற்கும் அமெரிக்கா முறையான உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

**இரண்டாம் கட்டம்:** முதற்கட்ட நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் மட்டுமே, சர்வதேச கடல் வழிப் போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் ஹார்முஸ் ஜலசந்தி நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறித்து ஆலோசிக்கப்படும்.

**மூன்றாம் கட்டம்:** மேற்கண்ட இரு நிலைகளும் வெற்றிகரமாகக் கடந்த பின்னரே, அணுசக்தி விவகாரம் குறித்து ஈரான் விவாதிக்கும். ஈரானின் யுரேனியம் செறிவூட்டலை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் நீண்டகால கோரிக்கை இதில் அடங்கும்.

அமெரிக்காவின் எதிர்வினை ஈரானின் இந்த முன்மொழிவு குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஒலிவியா வேல்ஸ் கூறுகையில், "இவை மிகவும் நுணுக்கமான ராஜதந்திர விவகாரங்கள்.

பத்திரிகைகள் வாயிலாக அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தாது. அமெரிக்க மக்களின் நலனே எங்களுக்கு முக்கியம். ஈரான் அணு ஆயுதம் பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். 4 மடங்கு தாக்குதல் ஈரான் துணை அதிபர் இஸ்மாயில் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட செய்தியில், "எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், நாங்கள் பதிலடி கொடுப்போம். எங்கள் கணக்கு வித்தியாசமானது. எங்களின் ஒரு எண்ணெய் கிணறு பற்றி எரிந்தால், அமெரிக்காவுக்கு ஆதரவளிக்கும் வளைகுடா நாடுகளில் 4 எண்ணெய் கிணறுகள் பற்றி எரியும்" என்று பதிவிட்டுள்ளார்.

## விஜய்யின் அடுத்த ஆன்மீக பயணம் எங்கே?





சென்னை, ஏப். 28–

2026 சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு முன்பு, திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்ற தவெக தலைவர் விஜய், வரும் 3ஆம் தேதி மராட்டியத்தில் உள்ள சீரடி சாய்பாபா கோவிலுக்கு சென்று வழிபாடு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக, 'தி கோட்' பட ரிலீஸ் மற்றும் தவெகவின் முதல் மாநாடு பணிகளுக்கு நடுவே, சீரடி சாய்பாபா கோவிலுக்கு சென்று விஜய் தரிசனம் செய்தது குறிப்பிடத்தக்கது.

தவெக தலைவர் விஜய் பலமுறை மராட்டியத்தில் ஷீரடி சாய்பாபா கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்தியுள்ளார். 2024 ஏப்ரல் மாதம் சாய்பாபா சந்நிதியில் அவர் எடுத்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலானது.

## உலகின் 5-து பெரிய ராணுவ செலவு செய்யும் நாடு என்ற அந்தஸ்தை பெற்றது இந்தியா!

புதுடெல்லி, ஏப். 28–

2025–ல் ராணுவத்திற்கு அதிகம் செலவு செய்த நாடுகள் பட்டியலில், அமெரிக்கா, சீனா, ரஷியா, ஜெர்மனி டாப் 4 இடங்களை பிடித்துள்ளன. 5–வது இடத்தை இந்தியா பெற்றுள்ளது, மொத்த உலக ராணுவச் செலவினத்தில் 58%–ஐ இந்த 5 நாடுகள் கொண்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு 1.68 ட்ரில்லியன் டாலர் ஆகும். 2025–ஆம் ஆண்டில் உலக நாடுகளின் மொத்த ராணுவச் செலவு 2,887 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. 2025ம் ஆண்டில் 92.1 பில்லியன் டாலர் செலவினத்துடன் உலகின் 5–வது பெரிய ராணுவச் செலவு செய்யும் நாடு என்ற அந்தஸ்தை இந்தியா பெற்றுள்ளது. உலகளாவிய ராணுவ செலவில் இந்தியாவின் பங்கு 3.2 சதவீதமாக உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் ராணுவச் செலவு 8.9% அதிகரித்துள்ளது.



பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, ஆயுதப் படைகள் தங்களைப் போருக்குத் தயார் நிலையில் வைத்திருக்க அவசரக்கால அடிப்படையில் பல ஆயுதங்களைக் கொள்முதல் செய்தன. 2026–27 மத்திய பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கு ரூ.7.85 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ 2.19 லட்சம் கோடி புதிய ஆயுதங்கள், போர் விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கப் பயன்படுத்தப்பட உள்ளன. சீனா மற்றும் பாகிஸ்தான் உடனான எல்லைப் பதற்றங்கள் இந்தியாவின் பாதுகாப்பு செலவை தொடர்ந்து உயர்த்தி வருகின்றன. இந்தியா தனது ஆயுத இறக்குமதியை 2016–20 மற்றும் 2021–25 காலகட்டங்களுக்கு இடையே 4% குறைத்துள்ளது. இருப்பினும், உலகளாவிய ஆயுத இறக்குமதியில் 8.2% பங்களிப்புடன் இந்தியா இன்னும் 2–வது இடத்தில் உள்ளது. இந்தியா தனது ராணுவத் தேவைகளுக்காக ரஷியாவை சார்ந்திருப்பதை வெகுவாகக் குறைத்து வருகிறது. 2011–15 இல் 70% ஆக இருந்த ரஷியாவின் பங்கு, தற்போது 40% ஆகக் குறைந்துள்ளது. தற்போது பிரான்ஸ், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்தியாவிற்கு ஆயுதங்களை வழங்கும் முக்கிய நாடுகளாக உருவெடுத்துள்ளன.

## வங்காளதேசத்துக்கான புதிய தூதராக தினேஷ் திரிவேதி நியமனம்!



புதுடெல்லி, ஏப். 28–

வங்காளதேசத்துக்கான இந்திய தூதராக இருந்த பிரணய் வர்மா, சமீபத்தில் பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதராக நியமிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து வங்காளதேசத்துக்கான புதிய தூதராக முன்னாள் மத்திய மந்திரி தினேஷ் திரிவேதி (வயது 75) நியமனம் செய்யப்பட்டார்.

திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த திரிவேதி ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ரெயில்வே மந்திரியாகவும், சுகாதாரத்துறை இணை மந்திரியாகவும் பதவி வகித்து உள்ளார். மேலும் மேற்கு வங்காளத்தில் இருந்து ஏற்கனவே நாடாளுமன்ற இரு அவைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.


கடந்த 2021–ம் ஆண்டு திரிணாமுல் காங்கிரசில் இருந்து விலகி பா.ஜனதாவில் இணைந்தார். வங்காளதேசத்துடனான இந்திய உறவுகள் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், அங்கு அமைந்துள்ள புதிய அரசு இந்தியாவுடன் உறவுகளை புதுப்பிக்க விரும்புகிறது. இதற்கு திரிவேதியின் அனுபவம் உதவும் என்ற நம்பிக்கையில் இந்த நியமனம் இருக்கும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு

### நாசிக் நாணயத் தாள் அச்சகம்; 534 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: கரன்சி நோட் பிரஸ் நாசிக்

அறிவிப்பு எண்: CNPN/HR/Rect./01/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 534 ஜூனியர் டெக்னீஷியன், மேற்பார்வையாளர், செயலக உதவியாளர், ஓவியர், பாதுகாப்பு அதிகாரி மற்றும் நல அலுவலர் பணியிடங்கள்


பணியிடங்கள்: மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத் & நொய்டா, நாசிக், தேவாஸ், ஹைதராபாத், நர்மதாபுரம்

தொடங்கும் தேதி: 20.04.2026

கடைசி தேதி: 19.05.2026


விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://cnpnashik.spmcil.com/



## சினிமா துளிகள்..!

### பிரபல பாலிவுட் நடிகர் பரத் கபூர் காலமானார்!




மூத்த நடிகர் பரத் கபூர், மாரடைப்பு காரணமாக தனது 80வது வயதில் காலமானார். மும்பையில் உள்ள சியோன் மருத்துவமனையில் பிற்பகல் சுமார் 3:30 மணியளவில் அவர் தனது இறுதி மூச்சை விட்டார். இதே நாள் மாலையில், மருத்துவமனைக்கு அருகிலுள்ள சுடுகாட்டில் அவரது இறுதி சடங்குகள் நடைபெற்றன.

கடந்த மூன்று நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பரத் குமார் முன்னதாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் திரையுலகை சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளும் பிரார்த்தனை கூட்டம், ஏப்ரல் 30 ஆம் தேதி மாலை 5 மணி முதல் 7 மணி வரை வடக்கு பம்பாய் சங்கத்தில் (பஞ்சாப் சங்கம்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரைப்பட இயக்குநர் அசோக் பண்டிட், பரத் கபூரின் மறைவுக்குத் தனது இரங்கலை வெளிப்படுத்தி, இன்ஸ்டாகிராமில் ஒரு உருக்கமான அஞ்சலியை பகிர்ந்துள்ளார். அந்த பதிவில் அவர், "மூத்த நாடக மற்றும் திரைப்பட நடிகர் பரத் கபூர் ஜியின் மறைவு செய்தியைக் கேட்டு வருத்தமடைந்தேன். எனது தொழில் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் அவருடன் பணியாற்றிய சிறந்த நினைவுகள் உள்ளன. ஒரு சிறந்த மனிதர். ஓம் சாந்தி," என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்தோனேசியாவில் இரு ரெயில்கள் மோதி பயங்கர விபத்து- 7 பேர் பலி!



இந்தோனேசியா, ஏப். 28–

இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தா அருகே இரு ரெயில்கள் மோதிக்கொண்ட விபத்தில் 7பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பெகாசி திமூர் ரெயில் நிலையில், நடைமேடையில் நின்றிருந்த பயணிகள் ரெயில் மீது மற்றொரு விரைவு ரெயில் மோதிய விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் படுகாயமடைந்த 80–க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



2331731
4377877
எண்ணெய்ப் பலகாரம்
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு
மற்றும் வடமாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்

# தரமற்ற குடிநீர் விற்றால் ரூ.5,000 அபராதம்: உணவு பாதுகாப்பு துறை எச்சரிக்கை!

சென்னை, ஏப். 28–

'தரமில்லாத குடிநீர் கேன்களை விற்பனை செய்தால், 5,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்' என, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறை எச்சரித்துள்ளது. கோடை வெயிலின் தாக்கம், நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், குடிநீர் கேன் விற்பனை அதிகரித்துள்ளது. இவற்றை பயன்படுத்தி, சிலர் தரமில்லாத மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய குடிநீரை, விற்பனை செய்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, குடிநீர் கேன் விற்பனையை கண்காணிக்கும்படி, அனைத்து மாவட்ட, உணவு பாதுகாப்பு நியமன அலுவலர்களுக்கு, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.




இது குறித்து, உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் குடிநீர் கேன் நிறுவனங்கள், உணவு பாதுகாப்பு துறையின் வழிகாட்டுதலை முழுமையாக பின்பற்றுவது அவசியம்.

தரமற்ற மற்றும் முறையான அனுமதி இல்லாமல், குடிநீர் விற்பனை செய்வது தெரிய வந்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, குடிநீர் கேன்களில் நிறுவனம், உற்பத்தியாளர் பெயர், தயாரிப்பு தேதி, காலாவதி தேதி கட்டாயம் இருக்க வேண்டும்.

ஒரு லிட்டர் குடிநீரில், 10 முதல் 75 மி.லி., கால்சியம், 5 முதல் 30 மி.லி., மெக்னீசியம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். கேன் தண்ணீரை, நேரடியாக சூரிய ஒளியில் தேக்கி வைக்கக்கூடாது.

ஒரு கேனை, 30 முறைக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. பயன்படுத்தும் கேன்கள், சுத்தமாக, சுகாதாரமாக பராமரிக்கப்பட வேண்டும். பலமுறை பயன்படுத்திய கேன்களில், தண்ணீரை விற்பனை செய்தால், உரிமையாளர்கள் மீது, குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல், விதிமுறைகளை மீறும் கடைகள் மற்றும் ஆலைகளுக்கு, 5,000 ரூபாய் அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது, பலமுறை புகார்கள் வந்தால், அவற்றின் உரிமத்தை ரத்து செய்ய, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கொடைக்கானலில் "செல்பி வித் சிஎம்"

கொடைக்கானல், ஏப். 28–

தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓய்வெடுப்பதற்காக தனது மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் குடும்பத்தினருடன் கடந்த 25–ந்தேதி கொடைக்கானலுக்கு வந்தார். கொடைக்கானல் பாம்பார்புரத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் அவர்கள் தங்கியுள்ளனர்.



இந்த நிலையில் 3–வது நாளாக காலை 6.45 மணி அளவில் மு.க.ஸ்டாலின் கொடைக்கானல் ஏரி சாலையில் நடைபயிற்சியில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அவருடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அதனை தொடர்ந்து கொடைக்கானல் ஏரிச்சாலையில் சைக்கிள் ஓட்டி மகிழ்ந்தார்.


பின்னர் தங்கும் விடுதிக்கு புறப்பட்டு சென்றார். முதல்–அமைச்சர் நடைபயிற்சி சென்ற இடங்களிலும், அவர் காரில் வந்த சாலைகளிலும் போலீசார் பாதுகாப்புக்காக நிறுத்தப் பட்டிருந்தனர்.

# 4-ந்தேதி காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும் - அர்ச்சனா பட்நாயக்!

சென்னை, ஏப் 28–

தமிழக சட்டமன்ற தேர்தல் கடந்த 23–ந்தேதி நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை வருகிற மே 4–ந்தேதி நடைபெற உள்ளது. இந்த நிலையில் வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–





தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 23.04.2026 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி 04.05.2026 (திங்கட்கிழமை) அன்று 62 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறவுள்ளது.

**வாக்குகள் எண்ணும் வழிமுறைகள்:**

வாக்குகள் எண்ணும் பணி சரியாக காலை 8 மணிக்குத் துவங்கும். முதலில் காலை 8 மணிக்குத் தபால் வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.

30 நிமிடங்களுக்கு பிறகு, அதாவது காலை 8:30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளை எண்ணும் சுற்றுகளில், கடைசி சுற்று வாக்குகள் எண்ணும் பணி, தபால் வாக்குகள் எண்ணும் பணி முடிக்கப்பட்டவுடன்தான் துவங்கப்படும்.

ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும் ஒரு பகுதியில் தபால் வாக்குகளும், மற்றொரு பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் அதற்குரிய மேசைகளில் எண்ணப்படும். இரண்டிற்கும் தனித்தனியாக மேற்பார்வைக்காக உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அளவில் (ARO Level) அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். 500 தபால் வாக்குகளுக்கு ஒரு மேசை என்ற விகிதத்தில் தபால் வாக்குகள் எண்ணப்படும்.

**தபால் வாக்குகள்:**

தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த 3.60 லட்சம் அலுவலர்களில், வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்க விண்ணப்பித்த 2.88 லட்சம் அலுவலர்கள் (80 சதவீதம்) தபால் வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

இத்துடன் தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்ட காவல்துறை சார்ந்த அலுவலர்களும், மற்ற தேர்தல் Zonal/Sector–ல் பணிபுரிந்த அலுவலர்கள், தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் பணியாற்றிய அலுவலர்களும் சேர்த்து மொத்தம் 3.36 லட்சம் தேர்தல் அலுவலர்கள் தபால் வாக்குகளாகவும், 1.10 லட்சம் அலுவலர்கள் தேர்தல் பணி சான்றிதழ் (Election Duty Certificate) பெற்று நேரடியாக வாக்குச்சாவடியிலும், வாக்களித்துள்ளனர்.

85+ மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அளித்த படிவம் 12D விண்ணப்பத்தின் பெயரில், மொத்தம் 1.73 லட்சம் வாக்காளர்கள் தபால் வாக்கு பெற்று வாக்களித்துள்ளனர்.

இதுவரை சேவை வாக்காளர்கள் (Service Vot–ers) 18,000 நபர்கள் வாக்களித்துள்ளனர். இவர்களின் தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளான 04–05–2026 (திங்கட்கிழமை) அன்று காலை 8 மணி வரை பெறப்படும்.

வாக்குச்சாவடியில் வாக்களித்த வாக்காளர்கள் மட்டுமின்றி, கூடுதலாக 6.37 லட்சம் வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக வசதிகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களிடம் வாக்குகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வங்கிக்கணக்குகள்; பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

கோவை, ஏப். 28–

வங்கிக்கணக்கு துவங்கியது முதல், நீண்ட காலமாக செயல்படாமல் உள்ள கணக்குகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை வங்கிகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

செயல்படாத வங்கி கணக்குகள் அதிக அளவில் இருப்பது நாட்டின் நிதி அமைப்பின் வெளிப்படை தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இத்தகைய கணக்குகள் மூலம் பணமோசடி, ஹவாலா பரிவர்த்தனை, ஆன்லைன் மோசடி போன்ற சட்டவிரோத செயல்கள் எளிதாக நடைபெற வாய்ப்பு இருப்பதாக சைபர் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.



சைபர் கிரைம் பிரிவு அதிகாரி ஒருவர் கூறுகையில், 'தற்போது பள்ளி, கல்லூரி மாணவர்கள் உட்பட பெரும்பாலானோரிடம் வங்கி கணக்குகள் உள்ளன. இதை பயன்படுத்தி சட்ட விரோத பணபரிவர்த்தனைகள் நடைபெறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதுகுறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். தேர்வு மற்றும் விடுமுறை காலம் காரணமாக விழிப்புணர்வு முகாம்கள் ஜூன் மாதம் முதல் மாநிலம் முழுவதும் நடத்தவுள்ளோம். 'மியூல் அக்கவுண்ட்' மோசடிகளை தடுக்க விழிப்புணர்வு அவசியமாகியுள்ளது, 'என்றார். கோவை மாவட்ட முன்னோடி வங்கி நிதி ஆலோசகர் ரவி கூறுகையில், "பயன்படுத்தாமல் உள்ள வங்கி கணக்குகள், குறிப்பாக மகளிர் சுய உதவிக்குழு மற்றும் கல்லூரி மாணவர் கணக்குகள் மூலம் மோசடிகள் நடக்கின்றன.

பலர் அறியாமலேயே சிறிய கமிஷன் பெறுவதற்காக தங்களது வங்கி கணக்குகளை பிறருக்கு பயன்படுத்த அனுமதிக்கின்றனர். இதனால், மோசடி வழக்குகளில் அவர்களும் சிக்கிக்கொள்வது அதிகரித்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி கணக்குகள் வைத்திருப்பவர்கள் பயன்படுத்தப்படாத கணக்குகளை உடனடியாக மூடுவது பாதுகாப்பானது.

பொதுவாக, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக செயல்படாத கணக்குகள் தானாக முடக்கப்படுகின்றன. தற்போது, ஓராண்டுக்கு மேலாக பயன்படுத்தப்படாத கணக்குகளை மூட வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல் வழங்கியுள்ளது. முடக்கப்பட்ட கணக்குகளை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர கே.ஒய்.சி., ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம். ஆனால் முழுமையாக மூடப்பட்ட கணக்குகளை மீண்டும் பயன்படுத்த இயலாது," என்றார்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 3-வது அணு உலைக்குள் நீர்ப்பாய்ச்சும் பணி தொடக்கம்!

நெல்லை, ஏப். 28–

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் திட்டத்தின் 3–வது அலகுக்கான மிக முக்கிய செயல்பாட்டு தொடக்க மைல் கல்லான திறந்த அணு உலைக்குள் நீர் பாய்ச்சும் நிகழ்ச்சி வெற்றிகரமாக தொடங்கப்பட்டதாக இந்திய அணுமின் கழகம் அறிவித்துள்ளது. இதுகுறித்து இந்திய அணுமின் கழக நிர்வாக இயக்குநர் பிரதீக் அகர்வால் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–கூடங்குளத்தில் ரஷிய நாட்டு தொழில்நுட்பத்துடன் ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட 2 அணு உலைகள் மூலம் 2 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது. மேலும், ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட 3–வது அணு உலை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, மின் உற்பத்தி தொடங்குவதற்கான பிரதான பணிகள் நடைபெற்று வருகின்றன.



இதில் முக்கிய பணியான திறந்த அணு உலைக்குள் நீர் பாய்ச்சும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதனை இந்திய அணுமின் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான பி.சி. பகத், நீர் பாய்ச்சும் பணியை தொடங்கி வைத்தார்.இதன் மூலம் தூய்மையை உறுதி செய்யும் விதமாக பாதுகாப்பு அமைப்புகளையும், முக்கிய குளிரூட்டும் குழாய்களையும் மென்னீர் மூலம் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த சுத்திகரிப்பு பணி, வடிவமைப்பு தேவைகளுக்கு ஏற்ப தூய்மையான சூழலை அடைவதற்கான தொழில்நுட்ப அளவீடுகளை பூர்த்தி செய்ய, பிரதான கட்டுப்பாட்டு அறையில் இருந்து பாதுகாப்பு அமைப்பின் பம்புகளை கொண்டு மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் வரிசைமுறை சார்ந்த முறையில் செயல்படுத்தப்படுகிறது.

இது கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முக்கிய மைல் கல்லாக கருதப்படுகிறது. மேலும், அணுமின் நிலையத்தை முழுமையான செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான மிக முக்கிய படியாகும்.கூடங்குளத்தில் 4–வது அணு உலைக்கான கட்டுமானப் பணிகள் மேம்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, 5 மற்றும் 6–வது அணு உலைகளுக்கான கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த அணு உலை கட்டுமானப் பணிகள் நிறைவுபெறும் போது 6 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரெயில்களில் புகை பிடித்த 219 பேருக்கு அபராதம் - ரெயில்வே பாதுகாப்பு படையினர் நடவடிக்கை!

சென்னை, ஏப். 28–

இந்திய ரெயில்வேயில் ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களில் புகை பிடிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. ரெயில்வே சட்டம், 1989–ன் பிரிவு 167–ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும். பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்த தடை அமல்படுத்தப்படுகிறது. இதனை மீறுபவர்களுக்கு ரூ.200 முதல் 500 வரை அபராதம் அல்லது 6 மாதம் சிறைதண்டனை விதிக்கப்படுகிறது.





இதுதொடர்பாக ரெயில்வே பாதுகாப்பு படையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும், பலர் ரெயில் மற்றும் ரெயில் நிலையங்களில் புகைபிடிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அவர்களுக்கு ரெயில்வே பாதுகாப்பு படையினர் அபராதம் விதித்துள்ளனர்.

அந்த வகையில், சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஆண்டு (2025) ஜனவரி முதல் டிசம்பர் வரையில் ரெயில்வே வளாகம் மற்றும் எக்ஸ்பிரஸ் ரெயில்களில் புகை பிடித்ததாக 219 பயணிகளுக்கு ரெயில்வே பாதுகாப்பு படையினர் அபராதம் விதித்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து ரூ.43 ஆயிரத்து 800 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. சிறிய அலட்சியம் கூட பெரிய அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால் புகை பிடிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என ரெயில்வே பாதுகாப்பு படையினர் மூலம் பயணிகளுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

# புதுச்சேரி மதுவை தமிழகத்திற்கு எடுத்து செல்ல அனுமதி உள்ளதா?- கலால்துறை விளக்கம்!

புதுச்சேரி, ஏப். 28–

புதுவையில் இருந்து மதுபாட்டில் கொண்டு சென்றவர் மீது தொடரப்பட்ட வழக்கை, சென்னை ஐகோர்ட்டு ரத்து செய்துள்ளது.

தனி நபர் ஒருவர், தன் பயன்பாட்டுக்கு, 4 1/2 லிட்டர் மதுவை வைத்திருக்க, தமிழக அரசு விதிகள் அனுமதிக்கிறது. இந்த நிலையில், புதுவையில் இருந்து எடுத்து வரப்பட்ட, 1.680 லிட்டர் மதுபானம் மட்டுமே அவரிடம் இருந்ததால், வழக்கை ரத்து செய்வதாக, ஐகோர்ட்டு தெரிவித்திருந்தது.



இதனால் இனி, புதுவையில் இருந்து அனுமதிக்கப்பட்ட அளவில் மதுபானத்தை தமிழகத்திற்கு எடுத்து செல்லலாம் என சமூக வலைதளங்கில் தகவல் பரவியது. இதுகுறித்து புதுவை, கலால் அதிகாரிகள் கூறியதாவது:–

புதுவையில், தனி நபர் மதுபானங்கள் கொண்டு செல்ல, கலால் சட்டம் அனுமதிக்கிறது. இதன்படி, தனி நபர் ஒருவர், தன் சொந்த நுகர்வுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களை 4 1/2 லிட்டர் வரை வைத்திருக்கலாம். வெளிநாட்டு இறக்குமதி மதுபானமாக இருந்தாலும், 4.1/2 லிட்டர் வைத்திருக்கலாம்.

# அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை 1 லட்சத்தை தாண்டியது!

சென்னை, ஏப். 28–

அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஒரு லட்சத்தை கடந்துள்ளது.

மழலையர் வகுப்புகளில் 6 ஆயிரத்து 796 பேரும், 1–ம் வகுப்பில் 97 ஆயிரத்து 737 பேரும், 2 முதல் 8–ம் வகுப்பு வரை 8 ஆயிரத்து 178 பேரும் என மொத்தம் 1 லட்சத்து 12 ஆயிரத்து 711 மாணவர்கள் இதுவரை சேர்ந்துள்ளனர். இன்னும் சேர்க்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



சட்டமன்ற தேர்தலையொட்டி ஆசிரியர்கள் பலர் தேர்தல் பணிக்கு சென்றதால் அரசு பள்ளிகளில் சேர்க்கையில் தொய்வு இருந்தது. தற்போது தேர்தல் பணி முடிவடைந்ததால், மாணவர் சேர்க்கை மீண்டும் வேகமெடுத்துள்ளது. தொடர்ந்து மே, ஜூன் மாதங்களிலும் மாணவர் சேர்க்கை நடைபெறும். அரசு பள்ளிகளில் 5 லட்சம் மாணவர்கள் சேர்க்கை நடைபெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

கடந்த 2025–2026–ம் கல்வி ஆண்டில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை சுமார் 4 லட்சம் எண்ணிக்கை அளவில் இருந்தது.

அதனை விட அதிகமாக வருகிற கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கை நடத்த தமிழக அரசின் கல்வித்துறை முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறது. அரசின் திட்டங்கள் மற்றும் பொது மக்களிடம் விழிப்புணர்வு காரணமாக அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வாட்ஸ் அப் இனி இந்த மாடல் போன்களில் இயங்காது: பயனர்களுக்கு வெளியான முக்கிய அறிவிப்பு!

புதுடெல்லி, ஏப். 28–

ஆண்ட்ராய்டு 6.0–க்கும் குறைவான இயங்குதளங்களில் இயங்கும் ஸ்மார்ட்போன்களில், வரும் செப்டம்பர்–8 ஆம் தேதி முதல் வாட்ஸ்அப் சேவை நிறுத்தப்படும் என்று மெட்டா நிறுவனம் அறிவித்துள்ளது. தொழில்நுட்ப அம்சம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு வழங்குவதற்காக, ஆண்ட்ராய்டு 5.0 மற்றும் 5.1 போன்ற ஓல்டு வெர்ஷன்களில் இனி வாட்ஸ் அப் இயங்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பாதுகாப்பு வசதிகள் மற்றும் கூடுதல் அம்சங்களை வழங்க பழைய இயங்குதளம் மற்றும் ஹார்டுவேர் போதுமானதாக இல்லை என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பயனர்களுக்கு ஏற்கெனவே இதுதொடர்பாக எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டு விட்டதாகவும் மெட்டா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனர்கள் தங்கள் உரையாடல்கள், இமேஜ்கள்



உள்ளிட்டவை இழப்பு ஏற்படாமல் தடுக்க முன்கூட்டியே புதிய வெர்ஷன்களுக்கு மாறிக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020